## தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், மக்கள் தொடர்பு பிரிவு, நந்தனம், சென்னை-600 035

## செய்தி வெளியீடு எண்: 3 /2011 நாள்:13.09.11

## மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு என்.ஆர்.சிவபதி அவர்கள் ஆவின் பாலகத்தை திறந்து வைத்தார்.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு என்.ஆர்.சிவபதி அவர்கள் 12.09.2011 அன்று மாலை சென்னை அசோக்நகர், அசோக்பில்லர் அருகில் பொது மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு ஆவின் பாலகத்தை திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். இந்தப் பாலகத்தில் ஆவின் நெய், வெண்ணெய், பால் கோவா, மைசூர்பா, குலோப்ஜமூன், சுவையூட்டிய நறுமணப்பால், தயிர், மோர், யோகர்ட் ஆகிய அனைத்து ஆவின் பால் பொருட்களும் இந்தப்பாலகத்தில் கிடைக்கும்.

இந்த நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை செயலர் திரு ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப. , பால்வளத்துறை ஆணையர் /ஆவின் நிர்வாக இயக்குநர் திரு ம.ரா. மோகன், இ.ஆ.ப., ஆவின் இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் என். சுப்பையன். ஆவின் பொது மோளலர் (பணிக்குழு) திரு. பி. குமாரவேல் பாண்டியன், பொது மேலாளர் (விற்பனை) திரு எஸ்.கே.கதிர்வேலு மற்றும் ஆவின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

நுகர்வோர் தங்களது ஆலோசனை மற்றும் கருத்துக்களை 1800 425 33 00 (இலவச சேவை) என்ற தொலைபேசியில் ஆவின் 24 மணி நேர நுகர்வோர் நலன் மற்றும் சேவைப்பிரிவைத் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் அல்லது aavincomplaints@gmail.com என்ற இணையதள முகவரியிலும் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

உதவி பொதுமேலாளர் (மக்கள் தொடர்பு)
ஆவின்

பெறுநர்
செய்தி ஆசிரியர்